www.Padasalai.Net www.TrbTnpsc.com

# வரலாறு - பாடக்குறிப்புகள்

# பண்டைத் தமிழகம்

www.Padasalai.Net

அனைத்து பாடங்களையும் படிக்க

www.editorvalavan.com

வளவன் பப்ளிகேஷன்ஸ்

www.valavanpublications.com

/editorvalavan

https://www.youtube.com/c/valavantutorials

https://valavantutorials.blogspot.in

http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

Subscribe

Like, Share and Comment

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- இமயம் முதல் குமரிவரைப் பரவியுள்ள இந்திய நாட்டைப் போற்றி 'பழம்பெரும்நாடு எங்கள் பாரத தேசமடி பாப்பா!' என்று பாடுவர். அதில் விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பகுதி, உலகிலேயே மிகமிகத் தொன்மையானது என்று வரலாற்று அறிஞர் கூறுவர்.

- இந்தத் தென்னாட்டில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் மாநிலங்கள் உள்ளன. அவற்றுள் திருப்பதி மலைக்குத் தெற்கில் வாழும் மக்கள் பேசும் மொழி 'தமிழ்'. இதனை,

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ் கூறும் நல்லுலகம்

✓ என்று நன்னுல் இயற்றிய பவணந்தி முனிவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

✓ ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாட்டின் பெரும்பகுதி சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்றபின் தமிழ்மொழி பேசப்படும் மாநிலம் தனியாகப் பிரிக்கப்பட்டது. அதற்கு 1967 ஆம் ஆண்டில் முதலமைச்சராக அமர்ந்த அறிஞர் அண்ணா அவர்களால் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டப்பட்டது. நாம் பேசும்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

தமிழைச் செந்தமிழ், பைந்தமிழ், முத்தமிழ் என்றெல்லாம் பாராட்டிக் குறிப்பிடுவர்.

✓ நமது தமிழ்நாடு, மூவேந்தர் எனப்பட்ட சேர, சோழ, பாண்டியர் மரபுவழியினரான மாமன்னர்களால், பண்டைக் காலம் முதல் ஆளப்பட்டு வந்தது. தென்னாட்டின் தென்பகுதியைப் பாண்டியர்களும், மேற்குப் பகுதியைச் சேரர்களும், வடகிழக்குப் பகுதியைச் சோழர்களும் ஆண்டு வந்துள்ளனர்.

www.Padasalai.Net

# வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்

✓ வரலாற்றுக் காலத்தில் முன்னர், குமரிமுனைக்குத் தெற்கே உள்ள இந்துமாக்கடல் பகுதி, ஒரு பெருநிலப் பரப்பாக இருந்தது. அதைக் குமரிக்கண்டம் என்பர் புலவர். தென்னாட்டைப் போன்று எட்டு, பத்து மடங்கு பெரிய அந்நிலப் பரப்பில் பஃறுளியாறு ஓடியது. பன்மலை அடுக்கம் நீண்டிருந்தது. மழைவளம் பெருகி, பெருங்காடுகள் வளர்ந்து, மக்களின் நாகரிகமும் சிறந்து நல்லதோர் அரசும் நடைபெற்றிருக்க வேண்டும் என்பர். அதுவே பண்டை அரசான பாண்டிய அரசு ஆக இருத்தல் கூடும்.

www.Padasalai.Net

வளவன் பப்ளிகேஷன்ஸ்
www.valavanpublications.com
/editorvalavan
https://www.youtube.com/c/valavantutorials
https://valavantutorials.blogspot.in
Subscribe
Like, Share and Comment

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்று சங்கங்கள்

✓ அக்காலத்தில் பாண்டியர் தலைநகர் 'தென்மதுரை' அங்குத் தமிழ் வளர்த்த தலைச் சங்கம் கூடியது என்று கூறப்படுகிறது. பின்னர் நிகழ்ந்த கடற்கோளால், தென்மதுரை உள்ளிட்ட பெருநிலப்பகுதி கடலில் மூழ்கியதால், நீரில் மூழ்காத நிலப்பரப்பில் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய அரசு நடைபெற்றது.

✓ அந்நகரில் தமிழ் வளர்த்த புலவர்கள் கூடும் இடைச்சங்கம் நடைபெற்றது. அந்தத் தலைநகரும் பின்னர் கடற்கோளுக்கு இரையானது.

www.Padasalai.Net

வளவன் பப்ளிகேஷன்ஸ்
www.valavanpublications.com
/editorvalavan
https://www.youtube.com/c/valavantutorials
https://valavantutorials.blogspot.in
Subscribe
Like, Share and Comment
http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-exam-study-materials-study.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

✓ அதன்பின்னர், பாண்டியர் இன்றைய மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தினர். மதுரை மூதூரில் தமிழ் வளர்த்த புலவர்களின் கடைச் சங்கம் நடைபெற்றது. இங்குப் பாண்டிய மன்னர் தலைமையில் புலவர்கள் கூடித் தமிழ் ஆய்வு நடத்திய சிறப்பால் இந்நகரே 'கூடல்' என்றும் பெயர் பெறுவதாயிற்று. தமிழ்மொழியின் வளத்தைப் பெருக்கும் இலக்கியம் வளர்த்த தலை, இடை, கடைச் சங்கங்கள் மூன்று தலைமுறை பலவாகப் பாண்டியர் தலைமையில் நடைபெற்றது என்பர். அத்தகு சங்கங்கள் நீண்ட நெருங்காலம் நடைபெற்றிருக்கலாம் என்று கூறலாம்.

www.Padasalai.Net

வளவன் பப்ளிகேஷன்ஸ்
www.valavanpublications.com
/editorvalavan
https://www.youtube.com/c/valavantutorials
https://valavantutorials.blogspot.in
Subscribe
Like, Share and Comment

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# லெமூரியாக் கண்டம்

✓ கடற்கோளால் மூழ்கிப்போன குமரிக்கண்டத்தில்தான் பல்லுயிர்களும் பெருதற்கேற்ற தட்பவெப்பச் சூழல் நிலவியது. அதனால் பரிணாம வளர்ச்சி முறையில், அங்குதான் முதல் மனித இனம் தோன்றியிருக்க வேண்டும், அந்த மாந்தர் பேசிய முதல் மொழியே, தமிழின் மூலமொழியாகும். அந்த இனமே தமிழ் இனமாக உருக்கொண்ட தொன்மக்கள் ஆவர் என ஆய்வாளர் தெரிவிக்கின்றனர். அந்தப் பெருநிலத்தின் ஒரு பகுதியான தென்னாட்டில் வாழ்வோர், அந்தக் குமரிக் கண்ட மாந்தர் வழிவந்த இனத்தாராகத்தான் இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

www.Padasalai.Net

வளவன் பப்ளிகேஷன்ஸ்
www.valavanpublications.com
/editorvalavan
https://www.youtube.com/c/valavantutorials
https://valavantutorials.blogspot.in
Subscribe
Like, Share and Comment

www.Padasalai.Net www.TrbTnpsc.com

✓ இதற்கு மாறாக, குமரிக் கண்டத்திற்கு முன்னதாக அப்பகுதியை உள்ளடக்கிய ஒரு பெரும் கண்டம், ஆப்பிரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும் இணைக்குமாறு நிலவியதென்றும், அந்தக் கண்டத்தில் வாழ்ந்த 'லெமூர்' என்னும் குரங்கினத்தின் பெயரால் அக்கண்டம் 'லெமூரியா' என்று பெயர் பெற்றது என்றும், அங்குத் தோன்றிய மனிதக் குரங்கே மனிதன் பிறக்கக் காரணம் என்றும் கருதுகின்ற ஆய்வாளரும் உள்ளனர். எவ்வாறாயினும் முதல் மனித இனம், குமரிக்குத் தெற்கே இருந்த கண்டத்தில்தான் தோன்றியது. அவ்வின மாந்தர் பேசிய மொழியின் மூலமே தொல்தமிழ். அவர்தம் வழிவழி வந்த மரபினர் வாழும் நிலமே தமிழ்நாடு என்று முடிவு செய்யலாம்.

www.Padasalai.Net
வளவன் பப்ளிகேஷன்ஸ்
www.valavanpublications.com
/editorvalavan
https://www.youtube.com/c/valavantutorials
https://valavantutorials.blogspot.in
Subscribe
Like, Share and Comment

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# வரலாற்றுக் காலம்

✓ தமிழ்நாட்டைக் குறித்து அறியக் கூடிய வரலாற்றுக் காலம் சங்க காலத்தில் தொடங்குகிறது. சங்க காலம் என்பது கடைச்சங்கத்தில் புலவர்கள் அவ்வப்போது கூடித் தமிழ் ஆய்வு செய்த காலமாகும். அது தி.மு. ஆண்டு 200 முதல் தி.பி ஆண்டு 200 வரை 400 ஆண்டுக் காலமாகும். அது தி.மு.300 முதல் தி.பி.300 வரை என்று கொள்வோரும் உண்டு.

www.Padasalai.Net

குறிப்பு : தி.மு.–தி.பி என்பது திருவள்ளுவரின் பிறப்பாண்டான கி.மு.31 ஆம் ஆண்டை மையமாகக்

வளவன் பப்ளிகேஷன்ஸ்
www.valavanpublications.com
/editorvalavan
https://www.youtube.com/c/valavantutorials
https://valavantutorials.blogspot.in
Subscribe
Like, Share and Comment

www.Padasalai.Net www.TrbTnpsc.com

கொண்டு கணக்கிடுவதாகும். தமிழறிஞர்களின் முடிவின்படி, கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்னர் திருவள்ளுவர் பிறந்தார் என்று கொண்டு, காலத்தைக் கணக்கிடுவதைத் தமிழக அரசும் ஏற்று அறிவித்துள்ளது.

✓ தற்காலத்தில் சங்க இலக்கியம் எனக் கிடைத்துள்ள நூல்கள் எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். அவற்றிலுள்ள செய்யுட்களைக் கபிலர், பரணர், ஔவையார், நக்கீரர் முதலான பலநூறு புலவர்கள் இயற்றியுள்ளனர். அவற்றின் மூலம் தமிழ் மக்களின் நாகரிகம், பழக்கவழக்கம், பண்பாடு, ஆட்சிமுறை முதலானவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

✓ கடைச் சங்கக் காலத்திற்கு முன்னரே தமிழின் பெருமைக்கு அடையாளமாக அரும்பெரும் இலக்கணமான தொல்காப்பியம் தோன்றியுள்ளது. அதனால், அதற்கும் சிலபல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழில் இலக்கியம் வளர்ந்திருக்க வேண்டும் என்பர். சங்க காலத்திலேயே அனைத்துச் சமயத்தாரும் வியந்து போற்றும், திருக்குறள் தோன்றியிருக்கிறது என்பது தமிழுக்குத் தனிப்பெருமையாகும்.

www.Padasalai.Net

✓ நமது தாய்மொழி தமிழ் இலக்கண வரம்பு கொண்டு வளர்ந்த தன்மையால் ‘செந்தமிழ்’ என்றும் வழங்கப்பட்டது. பிறமொழிகளின் துணை தேவையின்றியே ‘தமிழ்’ வளரும்

www.Padasalai.Net www.TrbTnpsc.com

திறன் பெற்றிருப்பதால் தமிழை 'உயர்தனிச் செம்மொழி' என்று அறிஞர்கள் குறிப்பிடுவர்.

✓ மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட தென்னகத்தில் வாழ்ந்த தமிழர்கள் சங்க காலத்திற்கு முன்னிருந்தே 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பதற்கேற்ப, கடல் வாணிபத்தில் சிறந்திருந்தனர். நாவாய், கலம், கப்பல், தோணி, ஓடம், படகு, தெப்பம், கட்டுமரம் முதலான ஏராளமான சொற்கள் கடலில் செல்லும் கலங்களைச் சுட்டும் பெயராக உள்ளது. இதனால் கடற் பயணத்தில் தமிழர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டை நாம் அறியலாம்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- ✓ அக்காலத்தில் ‘புகார்’ என்னும் காவிரிபூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி, வஞ்சி முதலான பல துறைமுகங்கள் இருந்தன. மேற்கிலும், கிழக்கிலுமிருந்த எகிப்து, யவனம், ரோம், சீனம் முதலான பல நாடுகளுடன் பண்டமாற்று வணிகம் செய்துவந்தது தமிழ்நாடு.

- ✓ வடபுலத்தில் சிந்துவெளியில் அகழ்ந்து காணப்பட்ட மொகன்–சா–தாரோ, ஹரப்பா முதலான (பழைய) நகர நாகரிகச் சின்னங்களாகக் கண்டெடுக்கப்பட்டன. அங்கு கண்டெடுக்கப்பட்டப் பொருட்களை ஆய்வு செய்தனர். நான்கு– ஐந்து ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே அங்கு நிலவிய நகரமைப்பு, நாகரிகம் தென்னகத் தமிழ்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மக்களின் நாகரிகத் தொடர்புடையதாக உள்ளது என்பது உறுதியாகியுள்ளது. எனவே, பழந்தமிழர்கள் அக்காலத்தில் தென்னாட்டில் மட்டுமின்றி வடநாட்டிலும் பரவலாக வாழ்ந்துள்ளனர் என்பது உறுதியாகிறது.

- ✓ சங்க காலத்தில் தமிழப்புலவர்கள் நிலத்தை ஐந்து இயற்கைப் பிரிவாகப் பிரித்து வழங்கினர். மலைகளும் அது சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. காடுகளும் அது சார்ந்த நிலமும் முல்லை எனவும், கடலும் கடற்கரைப் பகுதியும் நெய்தல் எனப்பட்டது. நீர்வளத்துடன் வயல் சூழ்ந்த பகுதி மருதம் எனப்பட்டது. கடும் வறட்சிக்கு உள்ளாகித் திரிந்த நிலத்தைப் பாலை என வழங்கினர். அந்தந்த நிலத்தில்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வாழ்ந்த மக்கள் அந்தந்த நிலத்தில் செய்யக்கூடிய தொழிலைச் செய்தனர். அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள், குடிமக்களைக் காப்பதைத் தமது உயிரினும் மேலான கடமையாகக் கொண்டிருந்தனர்.

✓ அவர்களன்றியும் நாட்டில் பல குறுநில மன்னர்களும், வள்ளல்களும், சிறுசிறு பகுதிகளை ஆண்டிருந்தனர். புலவர்களும், இசைவாணரும், பாணரும், கூத்தரும், விரலியரும், வணிகரும், பல்வேறு தொழில் செய்வோரும், ஆயர், உழவர், பரதவர் எனப்பட்ட பலரும் நல்லமுறையில் வாழ்க்கை நடத்தும் சூழலைப் பெற்றிருந்தனர். குறிப்பாக உழவுத் தொழில், உலகோர்க்கு உணவளிக்கும் உயர்ந்த

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

தொழிலாக மதிக்கப்பட்டது. அதற்கு அடுத்த நிலையில் மனிதனின் மானம் காக்கும் துணி தரும் நெசவுத் தொழில் மதிக்கப்பட்டது.

## மூவேந்தர்கள்

### சேரர்

www.Padasalai.Net

- ✓ சேரர் ஆட்சிப் பகுதியில் தற்போதைய கேரளமும், வடமேற்கு தமிழகமும் உள்ளடங்கி இருந்தன.
- ✓ சேரர் மரபில் வந்தவருள் – இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,

www.Padasalai.Net www.TrbTnpsc.com

சிலம்பு புகழ் சேரன் செங்குட்டுவன் முதலானோர் புகழ் ஓங்கியவர்கள். அவ்விருவருமே வடக்கில் இமயம் வரை சென்று வெற்றிக்கொடி நாட்டியவர்கள் என்று கூறப்பட்டுகின்றது.

✓ சேரர்களின் தலைநகர் வஞ்சி (கரூர்), துறைமுகம் தொண்டி மற்றும் முசிறி. சின்னமாக விற்கொடியும் விளங்கின.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# சோழர்

- ✓ சோழர்களின் ஆட்சிப் பகுதியில் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் தென்னாற்காட்டின் சில பகதிகள் உள்ளடங்கி இருந்தன.

- ✓ சோழ மரபில் வந்தவர்களுள் – கரிகாற்சோழன், கிள்ளிவளவன் ஆகியோர் புகழ்மிக்கவர்கள். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சோழமன்னன் கரிகாலன். அவன் தனது ஆட்சிக் காலத்தில், ஈழத்தை வென்று, அந்நாட்டவரைக் கைதிகளாகக் கொண்டு வந்து காவிரியின் குறுக்கே கல்லணையைக் கட்டினார். அது

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

இன்றும் பயன்பாட்டில் உள்ளது. எனவே அவர் கரிகால் பெருவளத்தான் என்று போற்றப்படுகிறார்.

✓ சோழர்களின் தலைநகரம் உறையூர், துறைமுகம் காவிரிப் பூம்பட்டினம், சின்னமாக புலிக்கொடியும் விளங்கின.

✓ இடைக்காலத்தில் வாழ்ந்த இராசராசசோழன், இராசேந்திரசோழன் ஆகியோரும் பெரும்புகழ் பெற்றவர் ஆவர். அவர்கள் வடபுலத்தை மட்டுமின்றி ஜாவகம், கடாரம் முதலான கீழ்த்திசை நாடுகளையும் வென்றதாக வரலாறு கூறுகிறது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# பாண்டியர்

- ✓ பாண்டியர்களின் ஆட்சிப் பகுதி கன்னியாகுரி முதல் மதுரை வரை பரவியிருந்தது.

- ✓ பாண்டிய மரபில் வந்த மன்னர்களுள் பீடும் பெருமையும் வாய்ந்தவர்கள் சிலர். அவர்களுள் பாண்டியன் முடத்திருமாறனும், தன்மீது போர் தொடுத்த ஏழு குறுநில மன்னர்களை ஒருசேர வென்ற தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற பெரிமைக்குரியவனும், யானோ அரசன்? யானே கள்வன்! என்று கூறி வளைந்த தன் செங்கோலை

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

நிமிர்த்துமாறு உயிர் நீத்தவனுமான பாண்டியன் நெடுஞ் செழியனும் குறிப்பிடத்தக்கவர்கள். பாண்டியர்களின் தலைநகரம் மதுரை, துறைமுகம் கொற்கை (தூத்துக்குடி), சின்னமாக மீன்கொடியும் விளங்கின.

- ✓ குறுநில மன்னர்களாக விளங்கிய கடையெழு வள்ளல்களான பாரி, ஓரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன் ஆகியோர் புகழ்பெற்றவர்கள் ஆவர்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மக்கள் வாழ்க்கை

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்

- ✓ என்னும் குறள்மொழிக்கேற்ப வேறுபாடற்ற சமுதாயம் நிலவியது.

www.Padasalai.Net

- ✓ அவரவர் செய்யும் தொழிலின் காரணமாக வேறுபாடு தோன்றியது. குலங்கள் பலதோன்றின. அவர்தம் நடைமுறை வாழ்வில் ஏற்றத்தாழ்வுகளும் இருந்தன. ஆயினும் வருணாசிரம அடிப்படையில், பிறப்பினாலேயே வேற்றுமை

வளவன் பப்ளிகேஷன்ஸ்
www.valavanpublications.com
https://www.youtube.com/c/valavantutorials
/editorvalavan
https://valavantutorials.blogspot.in
Subscribe
Like, Share and Comment

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பாராட்டும் நிலை அக்காலத்தில் இடம்பெறவில்லை எனலாம். தீண்டாமை நடைமுறையில் பின்பற்றப்பட்டதாகக் கருதச் சிறிதும் இடமில்லை. காலப் போக்கில் தமிழ் மக்களிடம் திணிக்கப்பட்டதொரு வழக்கமே 'சாதிவழிப்பட்ட' உயர்வும், தாழ்வும், தீண்டாமை இழிவும் ஆகும்.

✓ சங்க காலச் சமுதாயத்தில் பெண்கள் உரிமை கொண்டவராக இருந்ததால், காதல் அடிப்படையில் மணவாழ்க்கை அமைந்தது. காதலர் இருவர் கருத்தொருமித்து இல்லறத்தில் ஈடுபட்டதைப் பெற்றோரும் ஏற்றனர். புரோகிதர்கள் நடத்தும் சடங்குகளும், வேள்வித் தீ வளர்த்தலும், வடமொழி மந்திரமும் இடம்பெறவில்லை.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- ✓ அக்காலத்தில் மகளிரும் உரிமையுள்ள வாழ்வு நடத்தும் வாய்ப்பு இருந்தது. அன்பினாலோ, காதல் பிணைப்பினாலோ ஒருவருடன் ஒருவர் இணங்கிப் போயினர்.
- ✓ ஆனால் வைதிக முறையில் பின்பற்றப்பட்டதைப்போல், மகளிர் தகுதியற்றவர்கள் என்னும் நோக்கத்தில் அவர்கள் உரிமை மறுக்கப்பட்டவர்களாக இல்லை எனலாம்.

www.Padasalai.Net

- ✓ திருக்கோவில்கள் கட்டும் முறை வளராத அக்காலத்தில், சங்ககால மக்கள் போரில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்தவர்களின் நடுகல்லையும் தமது முன்னோர்களையுமே வழிபட்டு வந்தனர்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

✓ அறுவடை விழா, பொங்கல் விழா, இளவேனில், பருவவிழா போன்ற விழாக்களை மக்கள் கொண்டாடினர். தலைநகர்களில் இந்தி விழாவும் கொண்டாடப்பட்டது. பிற்காலத்தில் புராணங்களின் வழியாகப் பரவிய பல பண்டிகைகளை அக்கால மக்கள் அறிந்திருக்கவில்லை.

❖❖❖

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com





# பொதுத்தமிழ்

## 400 பக்கங்கள் அடங்கிய

## E-Book (PDF)

இப்போது ஆன்லைனிலும் கிடைக்கிறது

**www.valavanpublications.com**

வளவன் பப்ளிகேஷன்ஸ்

www.valavanpublications.com

/editorvalavan

https://www.youtube.com/c/valavantutorials

https://valavantutorials.blogspot.in

Subscribe

Like, Share and Comment

www.Padasalai.Net